*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p458-477** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# இலக்கியம் காட்டும் அறநெறிகள்: பழந்தமிழ் நூல்கள் முதல் நவீன சமுதாயம் வரையிலான வாழ்வியல் விழுமியங்களின் ஒப்பாய்வு

## Ethical Values Reflected in Literature: A Comparative Study of Life Values from Ancient Tamil Texts to Modern Society

**திருமதி சு.கலைமதி,**
*உதவிப் பேராசிரியர், பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்ணிவாக்கம், சென்னை.*
**Mrs. S. Kalaimathi*,**
*Assistant Professor, PERI College of Arts and Science, Mannivakkam, Chennai.*
*Mobile: 9940206780, Email: nandhinikalaimathi8@gmail.com.*

**திருமதி ரா அனிதா,**
*உதவிப் பேராசிரியர், மின் மற்றும் மின்னணு பொறியியல் துறை (EEE),*
*பெரி தொழில் நுட்பக் கல்லூரி, மண்ணிவாக்கம், சென்னை-48.*
**Mrs. R. Anitha,**
*Department of Electrical and Electronics Engineering (EEE), Assistant Professor,*
*PERI Institute of Technology, Mannivakkam, Chennai-48.*
*Email: anithaananth2711@gmail.com.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 30-07-2026
Accepted: **10-08-2026**

*Corresponding Author Email:
*nandhinikalaimathi8@gmail.com*

**Abstract:** Literature serves not only as a mirror reflecting the nature and values of human life, but also functions as a medium that transmits society's norms and culture across generations. In particular, the landscape of Tamil literature plays a vital role in cultivating human moral standards and guiding the individual along the path of righteousness. From Sangam literature to post-Sangam didactic texts, twin epics, devotional literature, and modernist works, literature across all eras subtly emphasizes how man should live with good conduct.

Sublime moral principles such as compassion, love, justice, impartiality, unity, humility, and charity are consistently put forward in Tamil literature. The nobility of family relationships, social responsibility, the benevolent mindset of helping other living beings, and ecological ethics that preserve the natural environment are conveyed to readers in an easily understandable manner through verses, poems, and narratives. Through this, Tamil literature stands out as an excellent guide for living that enhances man's inner virtues. Therefore, this study establishes that literature is not merely an art form of aesthetic expression, but also acts as a manual of life ethics that reforms human society and leads it on the right path.

**Keywords:** *Ethics, Domestic Life, Sangam Literature, Thirukkural, Silappatikaram, Manimekalai, Sirupanchamoolam, Life Values.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/)

**சுருக்கம் (Abstract)**

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையின் இயல்புகளையும் விழுமியங்களையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்வதோடு, சமூகத்தின் நெறிமுறைகளையும் பண்பாட்டையும் தலைமுறைகள் கடந்து கடத்தும் ஊடகமாகவும் செயல்படுகிறது. குறிப்பாக, தமிழ் இலக்கியப் பரப்பானது மனிதனின் ஒழுக்க நெறிகளை வளர்த்தெடுப்பதிலும், தனிமனிதனை அறவழியில் நடத்துவதிலும் மிக முக்கியப் பங்காற்றுகிறது. சங்க இலக்கியங்கள் தொடங்கி சங்கம் மருவிய கால நீதி நூல்கள், இரட்டைக் காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் மற்றும் நவீனத்துவப் படைப்புகள் வரை அனைத்துக் காலகட்ட இலக்கியங்களும் மனிதன் எவ்வாறு நன்னடத்தை உடையவனாக வாழ வேண்டும் என்பதை நுட்பமாக வலியுறுத்துகின்றன.

கருணை, அன்பு, நீதி, நடுவுநிலைமை, ஒற்றுமை, பணிவு மற்றும் ஈகை போன்ற உன்னதமான அறநெறிகள் தமிழ் இலக்கியங்களில் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. குடும்ப உறவுகளின் மேன்மை, சமூகப் பொறுப்புணர்வு, பிற உயிர்களுக்கு உதவும் ஜீவகாருண்ய மனப்பான்மை மற்றும் இயற்கைச் சூழலைப் பேணும் அமைப்பியல் அறம் போன்றவை செய்யுள்கள், கவிதைகள் மற்றும் கதையாடல்கள் வழியாக வாசகர்களுக்கு எளிதில் விளங்கும் வகையில் உணர்த்தப்படுகின்றன. இதன் மூலம் மனிதனின் உள்ளார்ந்த நற்பண்புகளை மேம்படுத்தும் சிறந்த வாழ்வியல் வழிகாட்டியாக தமிழ் இலக்கியம் விளங்குகிறது. எனவே, இலக்கியம் என்பது வெறும் அழகியல் வெளிப்பாடான கலை வடிவம் மட்டுமன்றி, மனிதச் சமூகத்தைச் சீரமைத்து நல்வழியில் நடத்தும் வாழ்வியல் அறக்கையேடாகவும் திகழ்கிறது என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

**திறவுச்சொற்கள் (Keywords)**

அறநெறிகள் (Ethics), இல்லறம் (Domestic Life), சங்க இலக்கியம் (Sangam Literature), திருக்குறள் (Thirukkural), சிலப்பதிகாரம் (Silappatikaram), மணிமேகலை (Manimekalai), சிறுபஞ்சமூலம் (Sirupanchamoolam), வாழ்வியல் விழுமியங்கள் (Life Values).

## 1. முன்னுரை

பழந்தமிழ்க் சமூகத்தில் அறமும் வீரமும் வாழ்வின் இரு கண்களாகப் போற்றப்பட்டு வந்தன. சங்க காலத்தில் தமிழர்கள் பொருள் ஈட்டுவதையும், அப்பொருளின் உதவியால் அறம் செய்வதையும், அதன் தொடர்ச்சியாக இன்பம் துய்ப்பதையும் தங்களின் முதன்மை வாழ்வியல் நெறியாகக் கொண்டிருந்தனர். இத்தகைய சீரிய வாழ்க்கையையே அவர்கள் 'அறவாழ்க்கை' என்று அழைத்தனர். உலக முழுவதையும் பரிசாகக் கொடுப்பதாக இருந்தாலும், சமூகத்திற்கும் மனசாட்சிக்கும் பழி தரும் தீய செயல்களைச் செய்யப் பழந்தமிழர்கள் முற்றிலும் மறுத்தனர். அறத்தினை மனித உறவுகளின் மையப் புள்ளியாக வைத்து அவர்கள் தங்களது அன்றாட வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். மேலும், தன்னலத்தைத் துறந்து பொதுநலத்தை உயிருக்கு நேராகக் கருதினர்; தம்மை நாடி வந்த எளிய மக்களுக்கு "இல்லை" என்று கூறும் அவச்சொல்லைக் கூறுவதைத் தமக்கு நேர்ந்த மாபெரும் இழிவாகக் கருதினர்.

தமிழர்களது வாழ்க்கை முறையானது தங்களது வாழும் இயற்கைச் சூழலுக்கு ஏற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து நிலத் திணைகளாகப் பிரிக்கப்பட்டு, நிலவியல்

மற்றும் சூழலியல் வரையறைக்குள் அமைந்திருந்தது. அந்தந்த நில அமைப்பிற்கு ஏற்பப் பண்பாடுகளும் அறநெறிகளும் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டன, போற்றப்பட்டன. வீரத்தைப் போலவே கொடையும் பழந்தமிழர்களால் பெரிதும் விரும்பப்பட்டது. அறம் செய்வதைத் தன் உயிருக்கு மேலான கடமையாகக் கருதியவர்கள் தமிழர்கள் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பல சான்றுகள் மூலம் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

## 2. 'அறம்' மற்றும் 'விழுமியம்' - சொற்பொருள் விளக்கமும் கோட்பாட்டுத் தளமும்

'அறம்' என்னும் சொல் "அறு" என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்த ஒன்றாகும். "அறு" எனும் அடிச்சொல்லிற்கு "அறுத்துச்செல்", "வழியை உண்டாக்கு", "உருவாக்கு", "துண்டி", "வேறுபடுத்து" எனப் பலவகைப்பட்ட பொருட்கள் வழங்குகின்றன. இதிலிருந்து, மனித வாழ்க்கை மேன்மை அடைவதற்கான நல்வழியைக் காட்டி, தீமைகளை அறுத்து எறிவதே 'அறம்' என்பது தெளிவாகிறது. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியின் முழுநிறை வடிவமே அறம் எனப்படுகிறது.

அறம் என்பது மனித இயக்கத்தின் வாழ்வியல் அடிப்படைப் பண்பாகும். அறம் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களுள் பல இடங்களில் பயின்று வந்துள்ளது. அறநெறியே மாந்தரின் நல்வாழ்வுக்கு மிகவும் உகந்தது. அறம் என்பது நற்செயல்களைக் குறிக்கும் ஒரு கலைச்சொல்லாகத் திகழ்வதுடன், நன்மை, ஈகை, நீதி முதலிய அனைத்து நேர்மறைப் பொருள்களையும் தன்னுள் தழுவி நிற்கிறது. பொதுவாக நல்லொழுக்கமும் நற்செய்கைகளுமே அறம் என்று அறியப்படுகின்றன.

இலக்கிய ஆய்வுகளில் 'விழுமியம்' என்ற சொல் 'விழுமம்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து கிளைத்ததாகும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில்,

"விழுமம் சீரமையும் சிறப்பும் இரும்பையும் ஆக" (தொல். சொல். உரியியல் 55)

என இளம்பூரணர் உரை விளக்குவது போல, 'விழுமம்' என்பது 'சீரமைப்பும் சிறப்பும்' சார்ந்த உயரிய மதிப்பீடுகளைக் குறிக்கிறது. சமுதாயத்தில் மனித நடத்தைகளைச் சீரமைத்து, தனிமனித வாழ்வை மேன்மைப்படுத்தும் உயரிய கருத்துக்களே விழுமியங்கள் எனப்படுகின்றன.

## 3. இல்லற அறமும் சமுதாய நெறிமுறைகளும்

அறநெறியில் இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் பெற்றிடும் பயனை வேறு நெறியில் சென்று பெற்றிட இயலாது. இதனைத் திருவள்ளுவர்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவ தெவன்" (குறள் – 46)
எனக் குறிப்பிடுகின்றார்.

இல்லறம் என்பது இல்வாழ்க்கையைக் குறிப்பதாகும். இது ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்வதாகும். திருமணம் என்பது வெறும் உடற்சேர்க்கை அன்று; அது இரு மனங்களின் உணர்வுப்பூர்வமான சேர்க்கையாகும். திருமணம் புரிந்து இல்லறத்தை நடத்துவது தனிமனித இன்பத்திற்காக மட்டும் அன்று; அறத்தினை நிலைநிறுத்துவதற்காகவே என்பது பழந்தமிழ்க் கொள்கையாகும். இல்லறம் என்பது துறவறத்திற்கு முரண்பட்டதன்று. இளமையில் முதிர்ச்சி மூப்படைவது போல, இல்லறத்தின் முதிர்ச்சியே துறவெனக் கொள்ளல் வேண்டும்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.38**

இல்லறம் நடத்திய இறுதிக்காலத்தில் தமக்குக் காவலாக அமைந்த மக்களோடும், அறத்தை விரும்பும் சுற்றத்தோடும் கூடிச் சிறந்த பணிகளைச் செய்வதே இல்லற வாழ்வு நடத்தியதன் பயன் எனத் தொல்காப்பியம் பின்வருமாறு சாற்றுகிறது:

“காமம் சான்ற கடைக்கோட் காலை ஏமம் சான்ற மக்களோடு துவன்றி அறம்புரி சுற்றமோடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே” (51-தொ.பொ.கற்பு)

மனத்தூய்மை உடையவர்க்கே நன்மக்கள் வாய்ப்பார்கள். அதனால் கணவனும் மனைவியும் நற்பண்பினராய் இருத்தல் வேண்டும். நன்மங்களைப் பெற்ற தந்தை, அவர்களைச் சான்றோர் அவையத்து முந்தியிருக்கச் செய்தல் வேண்டும். மகனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடனாகும் என்று புறநானூற்றுப் பாடல்கள் புகழும். இல்லறத்தின் மேன்மை பற்றிய உயரிய கருத்துக்கள் தமிழ் இலக்கியங்களில் விரவிக்கிடக்கின்றன.

## 4. இலக்கிய வகைகள் மற்றும் விழுமியக் கட்டமைப்பு

இலக்கியம் என்பது ஒரு மொழியின் பண்பட்ட வெளிப்பாடாகும். இந்த வரையறையின் கீழ் இலக்கியத்தை இரு முதன்மை வகைகளாகப் பிரிக்கலாம்:

1. கலை இலக்கியம் (Art Literature)
2. அறிவியல் இலக்கியம் (Scientific Literature)

பொதுவாகக் கவிதை, உரைநடை, நாடகம் போன்ற கலை இலக்கியப் படைப்புகளே மக்களிடையே விரிவாக அறியப்படுகின்றன. அறிவியலைக் காட்டிலும் கலை அழகியலின் வெளிப்பாட்டை இன்றியமையாததாக இலக்கியம் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. தமிழ் இலக்கியப் பரப்பில் பல்வேறு காலகட்டங்களில் இயற்றப்பட்ட நூல்கள், தம் காலத்துச் சமூக நிலைகளுக்கேற்ப அறநெறிகளை எவ்வாறெல்லாம் கட்டமைத்துள்ளன என்பதைப் பின்வரும் அட்டவணை சுருக்கமாகத் தொகுத்துக் காட்டுகிறது.

| **இலக்கியக் காலகட்டம்** | **முதன்மை நூல்கள்** | **முதன்மை அறப்பண்புகள்** | **சமூகப் பயன்பாடு / நோக்கம்** |
|---|---|---|---|
| **சங்க காலம்** | எட்டுத்தொகை, பத்துப்பாட்டு | வீரம், கொடை, வாய்மை, விருந்தோம்பல், திணை அறம் | இயற்கை சார்ந்த வாழ்வியல் மற்றும் செங்கோன்மை ஆட்சி முறைமை. |
| **சங்கம் மருவிய காலம்** | பதினெண்கீழ்க்கணக்கு (திருக்குறள், நாலடியார், சிறுபஞ்சமூலம்) | தனிமனித ஒழுக்கம், பொறை, நிலையாமை, சூழலியல் அறம் | சமுதாய மாற்றக் காலத்தில் மனித நெறிமுறைகளை முறைப்படுத்துதல். |

| **இலக்கியக் காலகட்டம்** | **முதன்மை நூல்கள்** | **முதன்மை அறப்பண்புகள்** | **சமூகப் பயன்பாடு / நோக்கம்** |
|---|---|---|---|
| **காப்பியக் காலம்** | சிலப்பதிகாரம், மணிமேகலை | அரசியல் நீதி, ஊழ்வினை, ஜீவகாருண்யம், பசிப்பிணி மருத்துவம் | குடிமக்கள் மையக் காப்பியங்கள் வழியே வாழ்வியல் உண்மைகளை உணர்த்துதல். |
| **நவீன காலம்** | நவீன கவிதைகள், உரைநடைகள் | பகுத்தறிவு, சமூகப் பொறுப்பு, இயற்கை பாதுகாப்பு, கார்ப்பரேட் எதிர்ப்பு | முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்தலும் உலக உயிர்களின் சமத்துவத்தைப் பேணுதலும். |

## 5. பல்வேறு இலக்கியங்கள் வெளிப்படுத்தும் அறநெறிகள்

### 5.1. வள்ளுவர் காட்டும் அறம்

திருவள்ளுவர் அறத்திற்கு மிகத் தெளிவான விளக்கத்தை அளித்திருக்கின்றார். ஒருவர் பொறாமை, பேராசை, கடுஞ்சொல் மற்றும் கோபம் ஆகிய நான்கு தீய குணங்களையும் தன்னுடைய வாழ்நாளில் வராமல் தடுத்துக் கடைபிடித்து வாழ்பவனே அறவழியில் வாழ்பவன் ஆவான். இதனை,

"அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்." (குறள் 35)

என்ற குறள் வழி அறியலாம். மேலும், கிடைத்ததைப் பகுந்து கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும் என்பதை,

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” (குறள் 322)

என்ற குறள் உணர்த்துகிறது.

### 5.2. ஔவையின் ஆத்திச்சூடி காட்டும் அறநெறி

எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதனை விரும்பித் தான் செய்ய வேண்டும். நமக்கு விருப்பம் இருந்தால்தான் அதற்காக நேரம் செலவிடுவோம்; பொருள் செலவிடுவோம். இன்னும் செய்ய வேண்டும் என்று தோன்றும். எதுவெல்லாம் நமக்கு விருப்பமோ அது நமது சிந்தனையில் இருக்கும். விரும்பினால் மகிழ்ச்சியாகச் செய்வோம். இங்கு ஔவையார் விளக்குவது என்னவென்றால், அறம் செய்வதை விருப்பத்துடன் செய்ய வேண்டும் என்பதாகும். அறம் என்றால் தானம், தர்மம் என்ற பொருள் மட்டுமல்ல; அறவழியில் நின்று தன் வாழ்நாளில் ஒழுக்கத்தைக் கடைபிடித்து வாழ்வதும் ஆகும். இதனை,

"அறம் செய்ய விரும்பு..." (ஆத்திச்சூடி - 1)

என்ற அடியில் குறிப்பிடுகின்றார். தன்னிடம் உள்ள உணவைத் தான் மட்டுமே உண்ணாமல் அடுத்தவருடன் பகிர்ந்து சாப்பிடு, குறிப்பாக இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து அளித்து உண் என்பதை,

“ஐயம் இட்டு உண்.”

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.

**5.3. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூவகை அறம்**

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரக் காப்பியம் மூன்று முதன்மை அறக் கருத்துக்களைச் மையமாகக் கொண்டு இயங்குகிறது. ஆட்சி செய்வதில் தவறிழைத்தவர்களை அறமே கூற்றாக மாறித் தண்டிக்கும்; செய்த ஊழ்வினை தவறாமல் வந்து அடையும்; கற்புடைய பெண்களை உயர்ந்தோர் போற்றுவார்கள் போன்ற அறம் சார்ந்த கருத்துக்களைக் கீழ்க்கண்ட வரிகள் சுட்டிக்காட்டுகின்றன:

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவார்"

**5.4. நாலடியார் கூறும் வாழ்வியல் நிலையாமையும் அறமும்**

அழகும் இளமையும் மிகுந்த செல்வமும் ஒருநாள் அழிந்துவிடும். காலம் செல்லச் செல்ல இவையும் மறைந்துவிடும் என்பது இயற்கை நியதியாகும். செல்வத்தின் மூலம் நற்செயல்கள் எதையும் செய்யாது வீணாகக் காலத்தைக் கழிப்பவனுடைய வாழ்க்கை உயர்ந்த வாழ்க்கை என்று கூறுவது தவறாகும். இவ்வாறு வாழ்பவனுடைய வாழ்வு, உயிருடன் வாழ்ந்தாலும் விழுந்த பிணத்திற்குச் சமம் என்று நாலடியார் கூறுகிறது:

“உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும் ஒருவழி நில்லாமை கண்டும் - ஒருவழி ஒன்றேயும் இல்லாதவன் வாழ்க்கை உடம்(பு)இட்டு நின்று வீழ்ந் தக்க (து)உடைத்து” (39)

**5.5. மணிமேகலை சுட்டும் ஜீவகாருண்ய அறம்**

மனிதனுடைய அன்றாடத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றைப் பூர்த்தி செய்து வாழ வேண்டும். அதனை நல்ல வழியில் பெற்று இல்லாதவர்களுக்குக் கொடுத்து வாழ வலியுறுத்த வேண்டும் என்பதை 'அறமெனப்படுவது' என்ற வரிகளின் மூலம் சீத்தலைச் சாத்தனார் உணர்த்துகிறார்:

"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவா திதுகேள் மன்னுயிர் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்" (ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை 228- 230)

**5.6. சிறுபஞ்சமூலம் விளக்கும் சூழலியல் மற்றும் சமுதாய அறங்கள்**

காரியாசன் இயற்றிய சிறுபஞ்சமூலம் எனும் நூல் ஐந்து செயல்களைச் செய்பவர்கள் அறநெறியில் செல்வார்கள் என்று கூறுகிறது.

1. மழைநீரைத் தேக்கி வைக்கக் குளம் வெட்டுகிறவன்.
2. நீர் வழிந்து ஓட வாய்க்கால் அமைப்பவன்.

3. குடிநீருக்காகப் புதுக் கிணறு அமைப்பவன்.
4. பாழ் நிலங்களைச் சீரமைத்து விளைநிலம் உருவாக்குபவன்.
5. நிழலும் பயனும் தரும் மரத்தினை நடுபவன்.

இந்த ஐந்து செயல்களை யார் செய்கிறார்களோ அவர்கள் உயரிய அறநெறியில் செல்வார்கள் என்று சிறுபஞ்சமூலம் நமக்கு விளக்குகிறது.

**6. வரலாற்று ரீதியிலான அறக்கருத்துக்களின் பரிணாம வளர்ச்சி: சங்க காலம் முதல் நவீன காலம் வரை**

சங்க இலக்கியங்களில் அறம் என்பது சங்கக் கால சமூக வாழ்க்கையில் எது உயர்வான பண்பாடாகக் கருதப்பட்டதோ, அதுவே அறமாகப் பார்க்கப்பட்டது. அகம் சார்ந்த வாழ்க்கை காதலைப் பற்றியும் புறம் சார்ந்த வாழ்க்கை வீரத்தைப் பற்றியும் பேசக்கூடியவை ஆகும். வீரம் என்பது போர்க்களத்தில் பகைவருடன் போரிடும்போது புறமுதுகு காட்டி ஓடக்கூடாது; எதிரியை வெற்றி பெற வேண்டும்; இல்லையென்றால் எதிரியை நேருக்கு நேராக எதிர்த்து நெஞ்சில் விழுப்புண் பெற்று மடிய வேண்டும். அதுவே போரறம் ஆகும். காதல் வாழ்க்கையில் தோழி தலைவியின் இரகசியத்தைக் காப்பாற்றுவது, தலைவியின் காதலுக்கு உண்மையாக இருப்பது போன்றவற்றைத் தொல்காப்பியர் 'அறத்தோடு நிற்றல்' என்று குறிப்பிடுகிறார். மேலும் தலைவி தன்னுடைய காதலை முதலில் தோழியிடம் தெரிவிக்க வேண்டும்; அதைத் தோழி செவிலித்தாயிடம் சொல்ல வேண்டும்; செவிலித்தாய் அதை நற்றாயிடம் சொல்ல வேண்டும். இப்படித்தான் காதல் திருமணத்தை நோக்கிச் செல்ல வேண்டும். இதைத்தான் தொல்காப்பியர் 'அறத்தோடு நிற்றல்' எனும் வாழ்வியல் நெறியாக வரையறுக்கிறார்.

அதன் பின்பு வந்த பக்தி இலக்கியக் காலகட்டத்தில், தீவிரமான பக்தியினால் மக்களின் சமூகச் சிந்தனைகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சுருங்கி, தத்துவார்த்த ரீதியிலான அறநெறிகள் பின்னடைந்தன. மீண்டும் மக்கள் பக்தியிலிருந்து பகுத்தறிவை நோக்கி எழுச்சி பெறத் தொடங்கிய காலத்தில், பகுத்தறிவின் இலக்கும் சமூகப் பொறுப்பும் இலக்கியத்தின் அறமாகக் கட்டமைந்தன. இன்றைய காலகட்டத்தின் வாழ்வியல் சூழலில் நாம் கடைபிடிக்க வேண்டிய அறமும் இலக்கியம் முன்நிறுத்தக்கூடிய அறமும் எதுவாக இருக்க முடியும் என்பதை உறுதி செய்வது இலக்கிய அறிவியலின் சமூகக் கடமையாகும்.

**7. தற்கால வாழ்வியலும் இலக்கியம் போதிக்கும் சூழலியல்-சமூக அறமும்**

சமூகப் பொருள் உற்பத்தியில் லாப நோக்கத்தோடு செயல்படுகின்ற நவீன நிறுவனங்களின் நடைமுறையானது இயற்கையின் மீது பகை முரணாக அமைகிறது. மனித இயற்கையானது திட்டமிடப்படாத இயற்கைச் சூழல்களில் திட்டமிட்ட மாற்றங்களை நிகழ்த்துவதாகும். பழங்காலத்தில் இத்தகைய மாற்றங்கள் இயற்கை மீதான நட்பு முரணாகவே கட்டமைந்து வந்திருந்தன. இந்த மனிதர்களின் உலகம் மனிதர்களுக்குப் பிரத்யேகமானது மட்டுமல்ல; புவியில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது என்ற உண்மையை ஒப்புக் கொள்வதுதான் மெய்யான அறம் ஆகும்.

இவ்வுயிரினங்கள் வாழக்கூடிய உலகத்தில், மனிதர்கள் அங்கமாக இருக்கக்கூடிய லாபவெறி பிடித்த நிறுவனங்களின் சுரண்டலுக்குப் பலியாகக்கூடிய சூழலுக்கு எதிராக, இச்சூழலை நேருக்கு நேர் எதிர்த்துச் செல்வது இக்காலகட்டத்தின் தலையாய அறமாக இருக்கிறது. சமூகப் பொறுப்பற்ற சுயநல வெறிப் பண்பாட்டை எதிர்ப்பதும், சமூகப் பொறுப்புடையவர்களாக மனிதர்கள் ஒருங்கிணைவதும், அதன் மகத்துவத்தைச் சமூக ஆழ்மனம் வரை நெகிழ்ச்சியூட்டும் அழகியலாகப் படைத்துக் காட்டுவதும்தான் இக்காலகட்டத்திற்கு இலக்கியம் போதிக்கும் அறமாக விளக்கம் பெறுகின்றது.

## 8. முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறநெறிகள் என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய் அன்று; அவை பழந்தமிழர்களின் அனுபவச் செறிவிலிருந்து முகிழ்த்த வாழ்வியல் நெறிமுறைகளாகும். சங்க இலக்கியங்களில் வீரமாகவும் கொடையாகவும் திகழ்ந்த அறம், நீதி நூல்களில் தனிமனித ஒழுக்கமாகவும், காப்பியங்களில் சமுதாய நீதியாகவும், பசிப்பிணி மருத்துவமாகவும் பரிணாம வளர்ச்சி அடைந்தது. சிறுபஞ்சமூலம் போன்ற நீதி நூல்கள் இயற்கையையும் நீர் நிலைகளையும் பேணுவதைச் சமுதாய அறமாக உயர்த்தின.

நவீனத்துவக் காலகட்டத்தில், லாப வெறி சார்ந்த நிறுவனச் சுரண்டல்களிலிருந்து இயற்கையையும் சக உயிர்களையும் பாதுகாப்பதும், சமூகப் பொறுப்புடன் உலக உயிர்களின் சமத்துவத்தை நிலைநிறுத்துவதுமே இலக்கியம் நமக்குக் கற்பிக்கும் முதன்மையான அறநெறியாகும். எனவே, இலக்கியங்கள் போதிக்கும் உன்னதமான அற விழுமியங்களை உள்வாங்கி, அவற்றை அன்றாட வாழ்வில் கடைப்பிடிப்பதே மனிதகுல மேம்பாட்டிற்கும் இயற்கைச் சமநிலைக்கும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

## 9. துணைநின்ற நூல்கள் (References List in MLA Style 9th Edition)

[1]. இராதாகிருஷ்ணன், இரா. *நீதி நூல்கள் ஏழு (தெளிவுரை)*. கவிஞர்-சிவகுரு பதிப்பகம், 2021.

[2]. தங்கமணி, கே. டி. கே. *மணிமேகலை பற்றி*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1988.

[3]. பாலசுப்பிரமணியன், சி. *வாழ்வியல் நெறிகள்*. நறுமலர் பதிப்பகம், 1990.

[4]. சிவக்குமார், கே. (முனைவர் புதியவன்). *இலக்கிய அறிவியல்*. கிண்டில் அமேசான், 2021.

[5]. தமிழ்நாடு அரசு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். "சங்க இலக்கியத்தில் அறம்." *பத்தாம் வகுப்பு தமிழ் உரைநடை உலகம்*, 2019, பக்கங்கள் 184-187.

[6]. விந்தியா கௌளரி. "நாலடியாரில் வாழ்வியல் அறங்கள்." *International Multidisciplinary Innovative Research Journal*, தொகுதி V, எண் 2, மே 2021.

[7]. *பழமொழி நானூறு*. பாடல் 64.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.38**


[8]. *நான்மணிக்கடிகை*. பாடல் 39.

[9]. *முதுமொழிக்காஞ்சி*. பாடல் 1.

[10].திருவள்ளுவர். *திருக்குறள்*. குறள்கள் 35, 46, 144, 322, 925.


## 10. ஆசிரியர் நலன்களின் முரண்பாட்டு அறிவிப்பு (Author Declaration Statement for Conflict of Interest)

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர்கள், இந்த ஆய்வினை மேற்கொள்வதிலோ, தரவுகளைத் தொகுப்பதிலோ அல்லது முடிவுகளை வெளியிடுவதிலோ எவ்விதமான நிதி சார்ந்த அல்லது தனிநபர் சார்ந்த நலன்களின் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை எனத் தெள்ளத் தெளிவாக உறுதி அளித்து அறிவிக்கின்றனர். இக்கட்டுரை முற்றிலும் இலக்கிய, சமூக மற்றும் கல்வியியல் சார்ந்த ஆராய்ச்சி நோக்கத்திற்காக மட்டுமே சமர்ப்பிக்கப்படுகிறது.